| காரைக்குடி நகராட்சி<br>30.08..2019 ம் தேதி நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்<br>தலைமை: திருமதி.அ.சுந்தரம்பாள் ஆணையர் மற்றும் தனிஅலுவலர்<br>மன்றப் பொருட்கள் | | | |
|---|---|---|---|
| Date of meeting of the council | S.No. | Subject in the Agenda | Decision of the council |
| **30.08.2019** | **1** | 1. 135. தமிழ்நாடு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.145 நாள் 21.09.2011ன்படி தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோயம்புத்தூர்க்கு இந்நகராட்சி பங்குத் தொகையாக 2018-2019ம் ஆண்டிற்கு ரூ.1,50,000/- (ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் இயக்குநர், நகரியல் பயிற்சி நிறுவனம், கோயம்புத்தூர் அறிவுரையின்படியும் கடிதம் ந.க.எண்.322/2019/அ3 நாள் 10.06.2019ன்படியும் இந்நகராட்சி கணக்கரை, நகரியில் பயிற்சி நிறுவனம் கோயம்புத்தூருக்கு 17.06.2019 முதல் 21.06.2019 வரை நகராட்சி கணக்கர்களுக்கான புத்தாக்க பயிற்சியில் கலந்து கொள்ள அனுப்பிய வகையில், அந்நிறுவனத்திற்கு ஐந்து நாட்களுக்கு உரிய தொகை ரூ.5,000/- செலுத்தவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>அனுமதிக்கலாம். மொத்தம் ரூ.1,55,000/- (ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பத்தி ஐந்தாயிரம் மட்டும்) நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலுத்த அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.8462/2011/சி1) | **தீர்மானம் எண்.135**<br>அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது |
| | **2** | 136. உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கை, சிவகங்கை அவர்களின் தொலைபேசி செய்தியில் தெரிவித்த இந்நகராட்சியின் 2016-2017ம் ஆண்டிற்குரிய தணிக்கை புத்தகத்தை இரண்டு பிரதிகளாக ஜெராக்ஸ் எடுத்து அதனை பைண்டிங் செய்து உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கை, சிவகங்கையில் ஒப்படைப்பு செய்வதற்குரிய உத்தேச செலவினம் தொகை ரூ.2000/- மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>அனுமதிக்கலாம். | **தீர்மானம் எண்.136**<br>அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது |

<table>
<tr><td></td><td></td><td>(ந.க.எண்.9457/2017/அ3)</td><td></td></tr>
<tr><td></td><td>3</td><td>137. காரைக்குடி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் உள்ள நுண்ணுயில் உரமாக்குதல் மையத்தில் ஈக்கள் அதிகமாக உள்ளதாலும், அவற்றை கட்டுப்படுத்த ரசாயனம் கலக்காத இயற்கை முறை மருந்து தெளிக்க கைத்தெளிப்பான் 6 எண்ணமும், கொசு தடுப்பு பிரிவிற்கு 4 தெளிப்பான்கள் வாங்கிடவும் உத்தேச செலவு தொகை ரூ.30,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.3117/2019/எச்1)</td><td>தீர்மானம் எண்.137<br>அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது</td></tr>
<tr><td></td><td>4</td><td>138. காரைக்குடி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வந்த கீழ்க்கண்ட வாகனம் வாங்கப்பட்டு பத்து ஆண்டுகளுக்கு மேலாக இயக்கப்பட்ட நிலையில், பின் வரப்பெற்ற ஆண்டுகளில் தொடர்ந்து பராமரிப்பு செலவினம் கூடுதலாக ஏற்பட்டதால் வாகனத்தை இயக்க முடியாமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.
<table>
<tr><th>வ.எண்</th><th>வாகனத்தின் பெயர்</th><th>வாகனம் எண்</th><th>வாகனம் வாங்கப்பட்ட ஆண்டு</th></tr>
<tr><td>1</td><td>டிப்பர் லாரி</td><td>TN63 Y 4951</td><td>1999</td></tr>
</table>
மேற்கண்ட வாகனம் முதிர்ந்த நிலையில் இயக்க முடியாமல் பல ஆண்டுகளாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதால் வாகனத்தை கழிவு செய்து அப்புறப்படுத்துவதற்காக, TECHNICAL ASSISTANT GOVERNMENT AUTO MOBILE WORK SHOP, SIVAGANGAI அவர்களிடம் கழிவு நீக்கம் சான்று பெற்றிட அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>அனுமதிக்கலாம்</td><td>தீர்மானம் எண்.138<br>அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது</td></tr>
<tr><td></td><td>5</td><td>139. இந்நகராட்சி வளர்ச்சி திட்டங்கள் மற்றும் பிறபணிகளுக்கு கீழ்க்கண்ட விவரப்படி தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்தமைக்கு கீழ்க்கண்டவாறு பட்டியல் வரப்பெற்றுள்ளது.
<table>
<tr><th>வ. எண்</th><th>விளம்பர விபரம்</th><th>விளம்பரம் செய்த நாளிதழ் / நாள்</th><th>தொகை ரூ.</th></tr>
<tr><td>1</td><td>காரைக்குடி நகராட்சியில் குடிநீர் விநியோகம் பணியினை ஒரு ஆண்டிற்கு</td><td>DECCAN CHRONICLE மற்றும் மக்கள் குரல்</td><td>70,228/-</td></tr>
</table></td><td>தீர்மானம் எண்.139<br>அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><td></td><td>பேணுதல் மற்றும் பராமரித்தல் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியது.</td><td>21.06.2019</td><td></td></tr>
</table>
மேற்கண்ட விபரப்படி பட்டியல் தொகை ரூ.70,228/-ஐ வழங்க அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக்குறிப்பு:<br>
குடிநீர் நிதியின் கீழ் அனுமதிக்கலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td></td>
<td>6</td>
<td>
140. இந்நகராட்சி வருவாய் நிதி 2019-2020ன் கீழ் ரூ.2.50 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்.31, கணேசபுரம் துப்புரவுப் பணியாளர் குடியிருப்புகள் அருகில் உள்ள நம்ம டாய்லெட் இடமாற்றம் செய்து அதனை இராமநாதன் செட்டியார் நகராட்சி ஆரம்பப்பள்ளி வளாகத்தில் வைக்கும் பணிக்கு நகர்மன்றம் அனுமதி அளித்ததின் பேரில் 14.08.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. இரண்டு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு.
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்த சதவீதம்</th></tr>
<tr><td>1</td><td>திருமதி.பி.வசந்தா, காரைக்குடி.</td><td>மதிப்பீட்டைவிட 0.12% குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.கே.சுந்தரபாண்டியன், காரைக்குடி.</td><td>மதிப்பீட்டைவிட 1.55% அதிகம்</td></tr>
</table>
மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் திருமதி.பி.வசந்தா, காரைக்குடி அவர்கள் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 0.12% குறைவாக உள்ளது. எனவே ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றுக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக்குறிப்பு:<br>
அனுமதிக்கலாம்.
</td>
<td>தீர்மானம் எண்.140<br>அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td></td>
<td>7</td>
<td>
141. இந்நகராட்சி வருவாய் நிதி 2019-2020ன் கீழ் ரூ.2.50 இலட்சம் மதிப்பீட்டில் இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கிவரும் வாகனங்களுக்கு GPS Tracking System பொருத்தும் பணிக்கு நகர்மன்றம் அனுமதி அளித்ததின் பேரில் 14.08.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. இரண்டு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு.
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்த சதவீதம்</th></tr>
<tr><td>1</td><td>M/S.MAPSPACE CONSULTING PVT LTD, CHENNAI</td><td>மதிப்பீட்டைவிட 0.16% குறைவு</td></tr>
<tr><td>2</td><td>M/S.SUNBRIGHT EQUIPMENTS, CUDDALORE</td><td>மதிப்பீட்டைவிட 1.31% அதிகம்</td></tr>
</table>
மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் M/S.MAPSPACE CONSULTING PVT LTD, CHENNAI அவர்கள் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 0.16% குறைவாக உள்ளது. எனவே ஒப்பந்தப்புள்ளியினை
</td>
<td>தீர்மானம் எண்.141<br>அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr><td></td><td></td><td>ஏற்றுக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>அனுமதிக்கலாம்.</td><td></td></tr>
<tr><td></td><td>8</td><td>142. இந்நகராட்சி குடிநீர் நிதி 2019-2020ன் கீழ் ரூ.3.20 இலட்சம் மதிப்பீட்டில் இந்நகராட்சி தலைமை நீரளிப்பு நிலையத்தில் உள்ள புதிய மற்றும் பழைய நீரேற்று நிலையங்களில் இருக்கும் குளோரினேசன் கலக்கும் பணிக்கு கூடுதலாக STAND BY DOSING PUMP WITH AUTOMATIC STARTER பொருத்தும் பணிக்கு நகர்மன்றம் அனுமதி அளித்ததின் பேரில் 14.08.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. இரண்டு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு.
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்த சதவீதம்</th></tr>
<tr><td>1</td><td>ஸ்ரீ சபரி இன்ஜினியரிங், சென்னை</td><td>மதிப்பீட்டைவிட 0.14% குறைவு</td></tr>
<tr><td>2</td><td>ஸ்ரீ ராஜாகணபதி இன்ஜினியரிங் ஒர்க்ஸ், சென்னை</td><td>மதிப்பீட்டைவிட 2.20% அதிகம்</td></tr>
</table>
மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் ஸ்ரீ சபரி இன்ஜினியரிங், சென்னை நிறுவனம் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 0.14% குறைவாக உள்ளது. எனவே ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றுக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>அனுமதிக்கலாம்.</td><td>தீர்மானம் எண்.142<br>அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது.</td></tr>
<tr><td></td><td>9</td><td>143. இந்நகராட்சி குடிநீர் நிதி 2019-2020ன் கீழ் ரூ.2.80 இலட்சம் மதிப்பீட்டில் இந்நகராட்சியில் உள்ள சாத்தப்பா பூங்கா, மகர்நோன்பு திடல், திருச்சி சாலை மற்றும் சுப்பிரமணியபுரம் போன்ற மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி வளாகத்தில் தண்ணீர் திறப்பதற்குள்ள பழைய சுலிஸ் வால்வுகளுக்கு பதிலாக புதிய சுலிஸ் வால்வுகள் அமைத்து அதற்கு வால்வு தொட்டிகள் அமைக்கும் பணிக்கு நகர்மன்றம் அனுமதி அளித்ததின் பேரில் 14.08.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. இரண்டு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு.
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்த சதவீதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு.டி.செந்தில்குமார், காரைக்குடி.</td><td>மதிப்பீட்டைவிட 0.13% குறைவு</td></tr>
</table></td><td>தீர்மானம் எண்.143<br>அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது.</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><td>2</td><td>திரு.கே.சுந்தரபாண்டியன், காரைக்குடி.</td><td>மதிப்பீட்டைவிட 2.32% அதிகம்</td></tr>
</table>
மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.டி.செந்தில்குமார், காரைக்குடி அவர்கள் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 0.13% குறைவாக உள்ளது. எனவே ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றுக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக்குறிப்பு:<br>
அனுமதிக்கலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td></td>
<td>10</td>
<td>
144. இந்நகராட்சி வருவாய் நிதி 2019-2020ன் கீழ் ரூ.2.25 இலட்சம் மதிப்பீட்டில் இந்நகராட்சி புதிய பேருந்து நிலையத்தில் உள்ள கழிப்பிடம் மராமத்துப்பணி செய்து தண்ணீர் வசதி செய்தல் மற்றும் சத்தப்பன் பூங்கா வளாகத்தில் பேட்டரி வாகனங்களுக்கு சார்ஜ் செய்வதற்கு சுவிட்சுகள் அமைக்கும் பணிக்கு நகர்மன்றம் அனுமதி அளித்ததின் பேரில் 14.08.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. இரண்டு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு.
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்த சதவீதம்</th></tr>
<tr><td>1</td><td>M/Sமல்லிகா அன் கோ, ஒப்பந்ததாரர், காரைக்குடி.</td><td>மதிப்பீட்டைவிட 0.12% குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.ஆர்.வி.கே.வெங்கடாசலபதி, ஒப்பந்ததாரர், காரைக்குடி.</td><td>மதிப்பீட்டைவிட 2.17% அதிகம்</td></tr>
</table>
மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் M/Sமல்லிகா அன் கோ, ஒப்பந்ததாரர், காரைக்குடி நிறுவனம் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 0.12% குறைவாக உள்ளது. எனவே ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றுக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக்குறிப்பு:<br>
அனுமதிக்கலாம்.
</td>
<td>தீர்மானம் எண்.144<br>அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td></td>
<td>11.</td>
<td>
145. இந்நகராட்சி வருவாய் நிதி 2019-2020ன் கீழ் ரூ.0.85 இலட்சம் மதிப்பீட்டில் இந்நகராட்சி செக்காலை மெயின் சாலையில் உள்ள ஆணையாளர் குடியிருப்பிற்கு புதிதாக ஏ.சி. மெஷின் பொருத்தல் மற்றும் மின்வசதி அமைக்கும் பணிக்கு நகர்மன்றம் அனுமதி அளித்ததின் பேரில் 14.08.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. இரண்டு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு.
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்த சதவீதம்</th></tr>
</table>
</td>
<td>தீர்மானம் எண்.145<br>அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><td>1</td><td>M/Sமல்லிகா அன் கோ, ஒப்பந்ததாரர், காரைக்குடி.</td><td>மதிப்பீட்டைவிட 0.11% குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.ஆர்.வி.கே.வெங்கடாசலபதி, ஒப்பந்ததாரர், காரைக்குடி.</td><td>மதிப்பீட்டைவிட 1.65% அதிகம்</td></tr>
</table>
மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் M/Sமல்லிகா அன் கோ, ஒப்பந்ததாரர், காரைக்குடி நிறுவனம் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 0.12% குறைவாக உள்ளது. எனவே ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றுக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக்குறிப்பு:<br>
அனுமதிக்கலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td></td>
<td>12</td>
<td>
146. இந்நகராட்சி வருவாய் நிதி 2019-2020ன் கீழ் ரூ.2.50 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்.33 தங்கபுஷ்பம் பூங்கா உள்ள நம்ம டாய்லெட்டை இடமாற்றம் செய்து அதனை ஆலங்குடியார் நகராட்சி பள்ளி வளாகத்தில் வைக்கும் பணிக்கு நகர்மன்றம் அனுமதி அளித்ததின் பேரில் 14.08.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. இரண்டு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு.
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்த சதவீதம்</th></tr>
<tr><td>1</td><td>திருமதி.பி.வசந்தா, காரைக்குடி.</td><td>மதிப்பீட்டைவிட 0.13% குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.கே.சுந்தரபாண்டியன், காரைக்குடி.</td><td>மதிப்பீட்டைவிட 1.55% அதிகம்</td></tr>
</table>
மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் திருமதி.பி.வசந்தா, காரைக்குடி அவர்கள் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 0.13% குறைவாக உள்ளது. எனவே ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றுக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக்குறிப்பு:<br>
அனுமதிக்கலாம்.
</td>
<td>தீர்மானம் எண்.146<br>அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td></td>
<td>13</td>
<td>
147. இந்நகராட்சி கல்வி நிதி 2019-2020ன் கீழ் ரூ.3.75 இலட்சம் மதிப்பீட்டில் இராமநாதன் செட்டியார் நகராட்சி ஆரம்பப்பள்ளிக்கு சுற்றுச்சுவர் அமைக்கும் பணிக்கு நகர்மன்றம் அனுமதி அளித்ததின் பேரில் 14.08.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. இரண்டு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு.
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்த சதவீதம்</th></tr>
</table>
</td>
<td>தீர்மானம் எண்.147<br>அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr><td></td><td></td><td><table><tr><td>1</td><td>திருமதி.பி.வசந்தா, ஒப்பந்ததாரர், காரைக்குடி.</td><td>மதிப்பீட்டைவிட 0.10% குறைவு</td></tr><tr><td>2</td><td>திரு.கே.சுந்தரபாண்டியன், ஒப்பந்ததாரர், காரைக்குடி.</td><td>மதிப்பீட்டைவிட 1.45% அதிகம்</td></tr></table>மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் திருமதி.பி.வசந்தா, ஒப்பந்ததாரர், காரைக்குடி அவர்கள் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 0.10% குறைவாக உள்ளது. எனவே ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றுக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>அனுமதிக்கலாம்.</td><td></td></tr>
<tr><td></td><td>14</td><td>148. இந்நகராட்சியில் இயங்கி வரும் அம்மா உணவகத்திற்கு தயிர் தேவைப்படுகிறது. இந்நகராட்சி கலவை உரக்கிடங்கில் உள்ள கோ-சாலையில் இருந்து 17.07.2019 முதல் பால் வருவதால் அதை காய்ச்சுவதற்கு பாத்திரங்கள் இல்லாததால் அதற்கு தேவையான பாத்திரங்கள் சரஸ்வதி மெட்டல் ஒர்க்ஸ் என்னும் நிறுவனத்தில் அலுமினியம் பாத்திரம் மூடி மற்றும் இதர சாமான்களை ரூ.1,676/-க்கு யோகம் மகளிர் சுயஉதவிக் குழுவினால் வாங்கப்பட்டது. அதற்கான செலவினத் தொகையை யோகம் மகளிர் சுய உதவிக் குழுவிற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.6529/2014/அ3)</td><td>தீர்மானம் எண்.148<br>அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது</td></tr>
<tr><td></td><td>15</td><td>149. காரைக்குடி நகராட்சி சிவகங்கை மாவட்டத்தில் அமைந்துள்ள ஒரு சிறப்பு நிலை நகராட்சியாகும். இந்நகராட்சியின் பரப்பளவு 13.75 சதுர கி.மீ ஆகும். 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்நகரின் மக்கள் தொகை 1,06,714 ஆகும். இந்நகராட்சியில் தற்போது சம்பை ஊற்று, ஓ.சிறுவயல் சாலை மற்றும் தேவகோட்டை சாலை ஆகிய நீர் ஆதாரம் அமைந்துள்ள இடங்களில் ஆழ்குழாய் கிணறுகள் அமைக்கப்பட்டு, அவற்றின் மூலம் நாள் ஒன்றுக்கு 12.03 MLD குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. அதன்மூலம் 2011-ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்நகரில் உள்ள 106714 மக்களுக்கு நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 112 லிட்டர் (112 LPCD) குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.<br>இந்நிலையில் இந்நகரில் பாதாள சாக்கடை திட்டப்பணி தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. நடப்பு ஆண்டிற்குள் இத்திட்டப்பணி முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வர திட்டமிடப்பட்டுள்ளது. பாதாள சாக்கடை திட்டம் செயல்படும் நகரம் என்பதால் அரசு விதிகளின்படி நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 135 லிட்டர் குடிநீர் வழங்க வேண்டிய நிலை உள்ளது. மேலும்,</td><td>தீர்மானம் எண்.149<br>அலுவலகக்குறிப்புகள் ஏற்கப்பட்டது</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | இந்நகரில் தற்போதுள்ள மக்கள் தொகை மற்றும் இனிவரும் காலத்திற்கு பெருகும் மக்கள் தொகைக்கு ஏற்ப கூடுதல் குடிநீர் ஆதாரம் தேவைப்படுகிறது. எனவே, காரைக்குடி நகராட்சிக்கு வருங்காலங்களில் ஏற்படக்கூடிய குடிநீர் தேவைக்காக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் மேற்கொள்ளப்படவுள்ள காவேரி கூட்டுக் குடிநீர் திட்டத்தில் காரைக்குடி நகராட்சியை சேர்த்துக் கொள்ள சம்மதம் தெரிவித்திடவும் அதற்கான விகிதாசார திட்ட மதிப்பீடு தொகையினை வழங்கிடவும் மற்றும் திட்ட ஆய்வுக் கட்டணம் ரூ.2.00 இலட்சத்தை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்திடவும் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>அ) அனுமதிக்கலாம்.<br>ஆ) ஆய்வுக் கட்டணம் ரூ.2.00 இலட்சத்தை குடிநீர் நிதியிலிருந்து செலுத்திட அனுமதிக்கலாம். | |
| | 16 | 150. இந்நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள எச்.டி.25 மின் இணைப்பிற்கு 2019-2020ஆம் ஆண்டிற்கான மின் ஆய்வுக் கட்டணம் ரூ.2,275/- செலுத்திட அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>அனுமதிக்கலாம். | **தீர்மானம் எண்.150**<br>அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது |
| | 17 | 151. காரைக்குடி நகராட்சியில் கணேசபுரம் பகுதியில் நகராட்சிக்கு சொந்தமான நகரளவு எண்.240ல் ரூ.300.00 இலட்சம் மதிப்பீட்டில் 24 துப்புரவு பணியாளர் குடியிருப்புகள் கட்டும் பணி மேற்கொள்வதற்கு மூலதன மான்ய நிதியின் கீழ் முழுமான்யமாக நிதி ஒதுக்கீடு வழங்கிட கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துருக்கள் அனுப்பப்பட்டது. அதன்பேரில், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.10568/2019/இ1 நாள் 19.08.2019துடன் இணைத்து வரப்பெற்றுள்ள மூலதன மான்ய நிதி 2019-2020க்கான கூட்ட நடவடிக்கையில் இந்நகராட்சியில் ரூ.300.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கண்டுள்ள பணியினை செய்திடவும், மான்யமாக ரூ.270.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு வழங்கியும் அனுமதிக்கப்பட்டுள்ளது. எனவே, மீதமுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.30.00 இலட்சத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கிடவும், மேற்கண்ட பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கிட கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துருக்கள் அனுப்பி வைத்திடவும் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>அனுமதிக்கலாம். | **தீர்மானம் எண்.151**<br>அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது |
| | 18 | 152. காரைக்குடி நகராட்சி பொது சுகாதார வாகனம் TN 25 AQ 8404 காம்பேக்டர் வாகனத்தின் கிளட்ச் பிளேட் பழுதாகி சரிசெய்து மாட்டிட ஆகும் உத்தேச செலவின தொகை ரூ.20000/-க்கு மன்றத்தின் | **தீர்மானம் எண்.152**<br>அலுவலகக்குறிப்பு |

<table>
<tr><td></td><td></td><td>அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>அனுமதிக்கலாம்.</td><td>ஏற்கப்பட்டது</td></tr>
<tr><td></td><td>19</td><td>153. காரைக்குடி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் டெங்கு தடுப்பு பணிக்கு, நிலவேம்பு குடிநீர் பள்ளிகள் மற்றும் பொது இடங்களில் வழங்க அரசு சித்த மருத்துவ பிரிவில் காய்ச்சி வழங்கப்பட அதற்கான எரிவாயு சிலிண்டர் நகராட்சி மூலம் வாங்கி கொடுக்கவும், மேலும் DBC பணியாளர்கள் வீடு தோறும் சென்று பார்த்ததற்கு ஒவ்வொரு வீட்டிலும் குறியீடு செய்ய சாக்பீஸ் வாங்கிடவும், அதற்கான உத்தேச செலவின தொகை ரூ.50,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>அனுமதிக்கலாம்.</td><td>தீர்மானம் எண்.153<br>அலுவலகக்குறிப்பு<br>ஏற்கப்பட்டது</td></tr>
<tr><td></td><td>20</td><td>154. காரைக்குடி நகராட்சியில் மத்திய, மாநில அரசு நிதியின் கீழ் பல்வேறு திட்டப்பணிகள் அனுமதிக்கப்பட்டு கீழ்க்கண்ட பணிகள் நடைபெற்று வருகின்றன.
<table>
<tr><th>வ. எண்</th><th>திட்டத்தின் பெயர்</th><th>பணியின் விபரம்</th><th>மதிப்பீடு ரூ.</th></tr>
<tr><td>1</td><td>அடிப்படை கட்டமைப்பு இடைவெளி நிரப்பு நிதி 2015-2016</td><td>கணேசபுரத்தில் துப்புரவு தொழிலாளர் குடியிருப்புகள் கட்டுதல்</td><td>230.00</td></tr>
<tr><td>2</td><td>TURI P 2017-2018</td><td>சாலைப்பணிகள்</td><td>100.00</td></tr>
<tr><td>3</td><td>14TH FI NANCE COMMI TTEE FUND</td><td>சாலைப்பணி, குடிநீர் பணி</td><td>150.00</td></tr>
<tr><td>4</td><td>MI CRO COMPOST CENTRE</td><td>மக்கும் குப்பைகளை உரமாக்குதல்</td><td>325.00</td></tr>
<tr><td>5</td><td>TURI P 2018-2019</td><td>சாலைப்பணிகள்</td><td>1000.00</td></tr>
<tr><td>6</td><td>BI O-MI NI NG</td><td>நுண்ணுயிர் மையம்</td><td>737.00</td></tr>
<tr><td>7</td><td>I UDM 2018-2019</td><td>சாலைப்பணிகள்</td><td>1992.70</td></tr>
<tr><td>8</td><td>MLA SCHEME 2018-2019</td><td>நாடக மேடை அமைத்தல், பேவர் பிளாக் பதித்தல் மற்றும் மழைநீர் வடிகால் அமைத்தல் போன்ற பணிகள் செய்தல்</td><td>32.50</td></tr>
</table></td><td>தீர்மானம் எண்.154<br>அலுவலகக்குறிப்பு<br>ஏற்கப்பட்டது.</td></tr>
</table>

<table>
<tr><td></td><td></td><td>
<table>
<tr><td>9</td><td>MP SCHEME 2018-2019</td><td>உயர்மின் கோபுரம் விளக்கு அமைத்தல் மற்றும் சீரணி அரங்கம் கட்டுதல்</td><td>26.00</td></tr>
<tr><td>10</td><td>KFW(WATER BODIES) SCHEME 2018-2019</td><td>ஊரணி மேம்பாட்டு திட்டம்</td><td>396.00</td></tr>
<tr><td>11</td><td>CSR (WATER ATM) FUND 2018-2019</td><td>குடிநீர் விநியோகம்</td><td>648.00</td></tr>
<tr><td>12</td><td>WATER SUPPLY INTERNAL PLUMBING 2018-2019</td><td>குடிநீர் விநியோகம்</td><td>288.00</td></tr>
<tr><td>13</td><td>IUDM 2018-2019 (ROAD WORK)</td><td>சாலைப்பணிகள்</td><td>1992.70</td></tr>
<tr><td>14</td><td>DROUGHT RELIEF SCHEME 2018-2019</td><td>குடிநீர் விநியோகம்</td><td>26.25</td></tr>
</table>
மேற்கண்ட திட்டப்பணிகளை தவிர்த்து பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாடு திட்டத்தின் கீழ் பல்வேறு பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், நீர்நிலைகள் மேம்பாடு பணிகள் மற்றும் பாதாள சாக்கடை திட்டப்பணியினால் சேதமடைந்துள்ள சாலைகளை சீரமைத்து புதுப்பித்தல் போன்ற பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு வழங்கிட கோரி அரசுக்கு கருத்துருக்கள் அனுப்பப்பட்டுள்ளன.<br>
மேற்கண்டவாறு நடைபெறும் திட்டப்பணிகளை கண்காணித்திடவும் திட்டப்பணிகளின் முன்னேற்றம் குறித்து அவ்வப்போது உயர் அலுவலர்களால் நடத்தப்படும் ஆய்வுக் கூட்டத்திற்கு அறிக்கைகள் சமர்ப்பித்தல், புகைப்படங்கள் எடுத்து அதில் பணியின் பெயர் தட்டச்சு செய்து அனுப்புதல் மற்றும் அவ்வப்போது கோரப்படும் திட்டப்பணிகளுக்கு கருத்துருக்கள் தயார் செய்தல் போன்ற பணிகளை செய்திட உதவிப் பொறியாளர் ஒருவர் மட்டும் உள்ளதால் அவருக்கு உதவியாக கணிணி தட்டச்சு மற்றும் Autocad தெரிந்த ஒரு நபரை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட தொகை அடிப்படையில் Outsourcing முறையில் பணிக்கு அமர்த்திக் கொள்ளவும், அதற்காக 85 நாட்களுக்கு (ஆகஸ்ட், செப்டம்பர் மற்றும் அக்டோபர்) உத்தேச செலவுத் தொகை ரூ.40,000/-க்கும் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக்குறிப்பு:<br>
பொதுநிதியின் கீழ் அனுமதிக்கலாம்.
</td><td></td></tr>
<tr><td></td><td>21</td><td>155. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித எண்.18891/2019/பி1 நாள் 14.08.2019ன்படி இந்நகராட்சி ஆணையாளர் அவர்கள் ஒருநாள் நடைபெற்ற WORKSHOP-CUM-EXHIBITION ON SUSTAINABLE SANITATION பயிற்சி விடுப்பில் கலந்து கொள்ள டெல்லி சென்று வந்த வகையில் பிரயாணப்படி ரூ.36,921/- இந்நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.</td><td>தீர்மானம் எண்.155<br>அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது.</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | அலுவலகக்குறிப்பு:<br>அனுமதிக்கலாம். | |
| | 22 | 156. காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாடு திட்டம் 2018-2019ன் கீழ் ரூ.4.15 இலட்சம் மதிப்பீட்டில், காரைக்குடி நகராட்சி இராமநாதன் செட்டியார் மேல்நிலைப் பள்ளிக்கு மேஜை மற்றும் இருக்கைகள் சப்ளை செய்யும் பணிக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடிதம் ந.க.டி.ஏ.5/2096/18, நாள் 13.12.2018ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்டுள்ள பணிக்கு அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களிடமிருந்து நேரிடையாக விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. இரண்டு விலைப்புள்ளகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு.<br>1 \| M/Sகாரைக்குடி சர்வோதயா சங்கம், காரைக்குடி \| 1 எண்ணம் \| ரூ.5841.00/-<br>2 \| M/Sடான்ஸி ஃபர்னிச்சர் ஒர்க்ஸ், மதுரை \| 1 எண்ணம் \| ரூ.6372.00/-<br>மேற்கண்ட இரண்டு விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள M/Sகாரைக்குடி சர்வோதயா சங்கம், காரைக்குடி நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்க அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>அனுமதிக்கலாம். | **தீர்மானம் எண்.156**<br>அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது |
| | 23 | 157. 19.08.2019 அன்று சென்னையில் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற மழைநீர் சேகரிப்பு மற்றும் பருவமழை முன்னெச்சரிக்கை பணிகள் தொடர்பான ஆய்வுக் கூட்டத்தில் நகரில் உள்ள அனைத்து நீர்நிலைகளுக்கும் மழைநீர் எவ்வித தடங்கலும் இன்றி செல்லும் வண்ணம் அனைத்து வரத்து கால்வாய்களையும் தூர்வாரி சுத்தம் செய்திட வேண்டும் எனவும், நகர்புறங்களில் பிற துறைகளை சேர்ந்த வாய்க்கால்களாக இருந்தாலும் மழைநீர் சேகரிப்பின் அவசியத்தைக் கருதி சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் நகரில் உள்ள அனைத்து வாய்க்கால்களை சுத்தம் செய்து தூர்வாரும் பணியை மேற்கொள்ள வேண்டும் எனவும் உத்தரவிட்டுள்ளார்கள். அதன்பேரில், இந்நகரில் உள்ள பிரதான மழைநீர் கால்வாய்களை HITACH மற்றும் JCB வாகனங்களைக் கொண்டு தூர்வாரி சுத்தம் செய்திட தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>பொதுநிதியின் கீழ் அனுமதிக்கலாம். | **தீர்மானம் எண்.157**<br>அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது |
| | 24 | 158. காரைக்குடி நகராட்சியில் மத்திய, மாநில அரசு நிதியின் கீழ் பல்வேறு திட்டப்பணிகள் | **தீர்மானம் எண்.158** |

| | | | |
|---|---|---|---|
| | | அனுமதிக்கப்பட்டு பணிகள் நடைபெற்ற வருகின்றன. நடைபெறும் திட்டப்பணிகளுக்கு நடத்தப்படும் ஆய்வு கூட்டத்திற்கு அறிக்கைகள் சமர்ப்பித்தல் புகைப்படங்கள் எடுத்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களுக்கும் அனுப்பிட பொறியியற் பிரிவிற்கு கலர் பிரிண்ட்டர் தேவைப்படுவதால், பழையது கொடுத்து புதிய கலர் பிரிண்ட்டர் 1 எண்ணம் வாங்கிட ஆகும் உத்தேச செலவினம் ரூ.24,000/-க்கு அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>பொதுநிதியின் கீழ் அனுமதிக்கலாம். | அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது |
| | **25** | 159. இந்நகராட்சியில் உள்ள பொது சுகாதாரப் பிரிவில் நகர்நல அலுவலர், 5 துப்புரவு ஆய்வாளர்கள், 9 துப்புரவு மேற்பார்வையாளர்கள் மற்றும் 3 எழுத்தர்கள் பணிபுரிந்து வருகின்றனர். மேலும் பொது சுகாதாரப் பணிகளின் கீழ் 9 பரப்புரையாளர்கள் பணியில் உள்ளனர். தற்போதுள்ள அலுவலக கட்டிட வளாகத்தில் மேற்படி அலுவலர்கள் அனைவருக்கும் போதுமான இடவசதி இல்லாமல் உள்ளது. மேலும், நகர்நல அலுவலர் கண்காணிப்பில் வைத்திட பிறப்பு., இறப்பு பதிவேடுகள் உள்ள பீரோக்கள் வைத்திடவும் போதுமான, இடவசதி இல்லாமல் உள்ளது. இந்நகராட்சி அலுவலக வளாகத்தில் வடபுறம் பேஸ்மென்ட் வரை கட்டி நிறுத்தப்பட்டுள்ள கட்டிடத்தை முழுமையாக கட்டி முடித்தால் அக்கட்டிடம் பொது சுகாதாரப் பிரிவு அலுவலகப் பணிகளுக்கு போதுமானதாக இருக்கும். எனவே, பேஸ்மென்ட் நிலையில் உள்ள மேற்படி கட்டிடத்தை முழுமையாக கட்டி முடிப்பதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.9.70 இலட்சத்திற்கு அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>பொதுநிதியின் கீழ் அனுமதிக்கலாம். | **தீர்மானம் எண்.159**<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| | **26** | 160. 19.08.2019 அன்று சென்னையில் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற மழைநீர் சேகரிப்பு தொடர்பான ஆய்வுக் கூட்டத்தில் சம்பந்தப்பட்ட நகராட்சி எல்லைக்குள் உள்ள அனைத்து நகராட்சி கட்டிடங்களிலும் வருகின்ற பருவமழை காலத்திற்கு முன் ஏற்கனவே உள்ள மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை புதுப்பித்தல் அல்லது இல்லா கட்டிடங்களில் புதிதாக மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் பணி உடனடியாக செய்து முடிக்கப்பட வேண்டும் என உத்தரவிட்டுள்ளார்கள். அதன்பேரில், இந்நகராட்சியில் உள்ள நகராட்சி அலுவலகம் கட்டிடம் பேருந்து நிலையங்கள், மருத்துவமனை கட்டிடங்கள், நீரளிப்பு நிலைய கட்டிடங்கள், சமுதாய நலக் கூடங்கள் ஆகிய கட்டிடங்களில் ஏற்கனவே உள்ள மழைநீர் சேகரிப்பு | **தீர்மானம் எண்.160**<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | | கட்டமைப்புகளை புதுப்பித்திடவும் மற்றும் இல்லாத இடங்களில் புதிதாக கட்டமைப்புகளை அமைத்திடவும் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.2.50 இலட்சத்திற்கு அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>பொதுநிதியின் கீழ் அனுமதிக்கலாம். | |
| | **27** | 161. இந்நகராட்சியில் வார்டு எண்.10ல் உள்ள சின்னையா அம்பலம் நகராட்சி பள்ளி வளாகத்தில் உபயோகமில்லாமல் உள்ள சிமெண்ட் தூண்களை கொண்டு விழா மேடை அமைத்திட தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.1.50 இலட்சத்திற்கு அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>பொதுநிதியின் கீழ் அனுமதிக்கலாம். | **தீர்மானம் எண்.161**<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| | **28** | 162. 2019ம் ஆண்டு வறட்சி நிவாரணம் பணிகளின் கீழ் சேர்வார் ஊரணி மற்றும் செல்லஞ்செட்டி ஊரணி ஆகிய இடங்களில் குடிநீர் விநியோகப் பணிக்காக அமைக்கப்பட்ட புதிய ஆழ்குழாய் கிணறுகளுக்கு மின் இணைப்பு பெறுவதற்கான பணிகள் செய்திடவும் மற்றும் ஆழ்குழாய் கிணற்றிலிருந்து அருகிலுள்ள பகிர்மானக் குழாயுடன் இணைப்பதற்கு புதிதாக பைப்லைன் அமைப்பதற்கும் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.2.00 இலட்சத்திற்கு அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>குடிநீர் நிதியின் கீழ் அனுமதிக்கலாம். | **தீர்மானம் எண்.162**<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| | **29** | 163. இந்நகராட்சியில் வார்டு எண்.14ல் முத்துப்பட்டிணம் 1ம் வீதியில் வித்யாகிரி பள்ளி பின்புறம் செல்லும் கால்வாயில் அமைக்கப்பட்டிருந்து கல்பாலம் முழுவதும் உடைந்து சேதமடைந்துவிட்டதால் மழைநீர் சாலையை கடந்து செல்லமுடியாத நிலை உள்ளது. மேலும், தற்போது மேற்படி முத்துப்பட்டிணம் 1ம் வீதி சாலை IUDM திட்டத்தின்கீழ் மேம்பாடு செய்யப்படவுள்ளதால் சாலையின் குறுக்கே ஆர்.சி.சி. பாலம் அமைத்திட தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.3.40 இலட்சத்திற்கு அனுமதிக்கலாம்.<br>அலுவலகக்குறிப்பு:<br>பொதுநிதியின் கீழ் அனுமதிக்கலாம். | **தீர்மானம் எண்.163**<br>அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது |
| | **30** | 164. இந்நகராட்சியில் வார்டு எண்.4ல் முத்துமாரியம்மன் கோவில் சாலையில் பாதாள சாக்கடை திட்டப்பணி முடிவுற்றதால் புதிதாக தார்ச்சாலை அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி தார்ச்சாலையின் இருபுறமும் சாலைக்கும், வடிகாலுக்கும் போடப்பட்ட பகுதி பள்ளமாக இருப்பதால் மழைக்காலங்களில் தார்ச்சாலை சேதமடைய வாய்ப்புள்ளது. மேலும், வாகன ஓட்டிகள் சாலையின் ஓரத்தில் செல்லும் போது தடுமாறி கீழே விழும் நிலை உள்ளது. மேலும், மண்சரிந்து வடிகாலும் | **தீர்மானம் எண்.164**<br>அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | தூர்ந்துவிடுகிறது. இதனை தடுப்பதற்காக மேற்கண்ட முத்துமாரியம்மன் கோவில் சாலையில் போக்குவரத்து அதிகம் உள்ள ஆர்ச் முதல் கோவில் வரை சாலையின் இருபுறமும் தார்ச்சாலைக்கும், வடிகாலுக்கும் இடைப்பட்ட பகுதியில் வடிகாலை உயர்த்தி பேவர் பிளாக் தளம் அமைத்திட தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>பொதுநிதியின் கீழ் அனுமதிக்கலாம். | |
| | **31** | 165. இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் எண்.TN 63 U 9666க்கு 11.09.2019 அன்றுடன் வருடாந்திர தரச்சான்று முடிவடைகிறது. எனவே, வாகனத்தை FC வேலைகள் பார்த்து வருடாந்திர தரச்சான்று புதுப்பித்து வாகனத்தை இயக்கிட ஆகும் உத்தேச செலவினம் ரூ.80,000/-க்கு அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>பொதுநிதியின் கீழ் அனுமதிக்கலாம். | **தீர்மானம் எண்.165**<br>அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது |
| | **32** | 166. இந்நகராட்சியில் ஆண்டு பராமரிப்பில் உள்ள கணிணி சம்பந்தப்பட்ட உபகரணங்களில் ஏற்பட்டுள்ள சில பழுதான பாகங்கள் ஆணையர் அறையில் உள்ள UPS, RICHO TONER, KEYBOARD – 5, MOUSE – 5 மற்றும் அ1 பிரிவு எழுத்தர் வசம் உள்ள பிரிண்ட்டர் பழுதாகி இயக்க இயலாத நிலையில் உள்ளதால் பழைய பிரிண்ட்டரை கொடுத்து புதிய பிரிண்ட்டர் ஒன்று வாங்கி பொருத்திட ஆகும் உத்தேச செலவினம் ரூ.30,000/-க்கு அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>பொதுநிதியின் கீழ் அனுமதிக்கலாம். | **தீர்மானம் எண்.166**<br>அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது |
| | **33** | 167. காரைக்குடி நகராட்சியில் “சம்பையூற்று” கரையில் அமைக்கப்பட்டுள்ள 11 ஆழ்குழாய் கிணறுகள் மற்றும் நகரில் ஆங்காங்கே அமைக்கப்பட்டுள்ள 24 ஆழ்குழாய் கிணறுகளின் நீர் ஆதாரத்தைக் கொண்டு நகரில் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. இதன்மூலம் நாள் ஒன்றுக்கு 12.03 MLD குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. அதன்படி நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 112 LPCD வீதம் குடிநீர் செய்யப்படுகிறது. இவ்வாறு விநியோகம் செய்யப்படும் குடிநீரில் திரவ குளோரின் (Sodium Hypo Chloride) மூலம் குளோரினேசன் செய்யப்படுகிறது. ஒரு இலட்சம் லிட்டருக்கு 21/2 லிட்டர் வீதம் திரவ குளோரின் சேர்த்து வழங்கும் பட்சத்தில், குடிநீர் விநியோகத்தின் கடைசி பகுதியில் (Tail End) 1.00 ppm குளோரின் அளவு கிடைக்கும். இவ்வாறு தினசரி விநியோகம் செய்யப்படும் 12.03 MLD குடிநீருக்கு சுமார் 310 லிட்டர் திரவகுளோரின் தேவைப்படுகிறது. அதன்படி 6 மாத காலத்திற்கு தேவைப்படும் (ஜீலை 2019 முதல் டிசம்பர் 2019 வரை) திரவ குளோரின் | **தீர்மானம் எண்.167**<br>அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | வாங்குவதற்கு ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.9.50 இலட்சத்திற்கு அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>குடிநீர் நிதியின் கீழ் அனுமதிக்கலாம். | |
| | 34 | 168. இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் ரூ.737.00 இலட்சம் மதிப்பீட்டில் நகராட்சி உரக்கிடங்கில் உள்ள குப்பைகளை Bio-Mining முறையில் அகற்றுதல் பணி நடைபெறவுள்ளது. மேற்படி திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிக்கு திட்ட ஆலோசணை வழங்கிட அண்ணா பல்கலைக் கழகம், சென்னை நிறுவனத்தை அமர்த்திக் கொள்ளவும், அதற்கான ஆலோசனைக் கட்டணம் ரூ.14.16 இலட்சம் மேற்படி நிறுவனத்திற்கு செலுத்திடவும் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>அனுமதிக்கலாம். | **தீர்மானம் எண்.168**<br>அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது |
| | 35 | 169. காரைக்குடி நகராட்சி உரக்கிடங்கில் உள்ள மறு சுழற்சிக்கு பயன்படாத மற்றும் விலை போகாத பிளாஸ்டிக் மற்றும் இரப்பர் கழிவுகளை அரியலூாில் உள்ள அல்ட்ரா டெக்சிமென்ட் கம்பெனிக்கு 10 லோடுகள் அனுப்ப அகும் வாகன வாடகை உத்தேச செலவினம் ரூ.80,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>அனுமதிக்கலாம். | **தீர்மானம் எண்.169**<br>அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது |
| | 36 | 170. 1) Resolved that Karaikudi Municipality is authorizing the authorized signatory to borrow the interest free loan of Rs.275.69 Lakh (Rupees Two Hundered Seventy Five Lakhs and Sixty Nine Thousand only) from TUFIDCO for "Provision of Internal Plumbing for HSC (Minimum) 8000 Nos) for making optimum utilization of Water Supply at Karaikudi Municipality under Revolving Fund of UIDSSMT as per the terms and conditions prescribed by TUFIDCO.<br>2) The authorized signatory be and hereby authorized to execute the loan agreement and other documents if any with TUFIDCO and complete all the other formalities including affixing of the common seal of Karaikudi Municipality on the documents to be executed with TUFIDCO on behalf of Karaikudi Municipality.<br>3) Resolved to repay the interest free loan as per the repayment schedule in the agreement.<br>4) Resolved to adhere to time line as envisaged DPR.<br>5) Resolved that Karaikudi Municipality is authorizing the authorized signatory to make necessary budgetary provisions in Karaikudi Municipality annual budget for the repayment of principal for the project proposals to TUFIDCO and is hereby confirmed that all dues will be paid in time without default for creating sustainable revolving fund.<br>6) Resolved that Karaikudi Municipality is authorizing the authorized signatory to open and operate an ESCROW account for Water Supply in favour of TUFIDCO till the repayment of Loan.<br>Office Note:<br>For approval | **தீர்மானம் எண்.170**<br>அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | 37 | 171. இந்நகராட்சி நீதிமன்ற எதிரில் இயங்கி வரும் அம்மா உணவகத்தில் கேஸ் அடுப்பு பழுது பணி மற்றும் இதர பழுதுகள் நிவர்த்தி செய்திடும் பணியினை விஜயா கேஸ் சர்வீஸ் நிறுவனம் மூலம் பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத் தொகை ரூ.6955/-ஐ வழங்கிடவும் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>பொதுநிதியின் கீழ் அனுமதிக்கலாம். | **தீர்மானம் எண்.171**<br>அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது |
| | 38 | 172. இந்நகராட்சி பணியாளர்களுக்கு 1993-1994 முதல் 2016-2017 வரை சேமநல நிதி சிறப்பு தொகைக்கு வட்டி கோரி கருத்துரு உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டு அதில் 1993-1994 முதல் 2011-2012 வரை மட்டுமே கணக்கீடு சரியாக உள்ளதென இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.பபா1/02886/2018, நாள் 29.06.2018 மூலம் ரூ.2540988/- ஒப்பளிப்பு செய்யப்பட்டு வரப்பெற்றுள்ளது. மேற்படி தொகை 10.10.2018ம் தேதியில் இந்நகராட்சி சேமநல நிதி கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.<br>அதனைத் தொடர்ந்து பணியாளர்களின் சேமநல நிதி பேரேட்டினை கொண்டு தனி நபர்களுக்கு வட்டி கணக்கீடு செய்யப்பட்டு 632 பணியாளர்களுக்கு கணக்கீட்டு தாளின்படி 1993-1994 முதல் 2011-2012ம் ஆண்டு வரை பணியாளர்களுக்கு ரூ.16458172/- வழங்க வேண்டிய நிலை உள்ளது. அதனால் வரப்பெற்ற வட்டி ரூ.2540988/- மட்டுமேயாகும். இந்த வித்தியாசத்திற்கு காரணம் 1993-1994 முதல் 2011-2012 வரை மாதாமாதம் பணியாளர்கள் ஊதியத்தில் பிடித்தம் செய்த சேமநலநிதி தொகையை அந்தந்த மாதமே கருவூலகத்தில் சேமநல நிதிக்கணக்கில் வரவு வைக்காததேயாகும். இவ்வாறு அந்ததந்த மாதங்களில் சேமநல நிதி கணக்கில் வரவு வைக்க இயலாத வகையில் இந்நகராட்சி நிதி நிலைமை இருந்துள்ளது. அந்தந்த மாதங்களில் ஊதியம், ஓய்வூதியம், மின் கட்டணம் போன்ற அன்றாட செலவுகளுக்கே நிதி பற்றாக்குறை ஏற்பட்டு கடன் பெற்று HALF LOAN – HALF GRANT ஊதியம் வழங்கிய நிலை கூட ஏற்பட்டுள்ளது.<br>தற்போது முதற்கட்டமாக கணக்கீட்டுதாளின்படி சேமநல நிதி இருப்பு பதிவேட்டில் அந்தந்த பணியாளர்களுக்குரிய வட்டி தொகையை வரவு வைத்து அதில் ஓய்வு பெற்ற, இறந்த | **தீர்மானம் எண்.172**<br>அலுவலகக்குறிப்புகள் ஏற்கப்பட்டன. |

| | | | |
|---|---|---|---|
| | | பணியாளர்களின் வட்டி தொகையை முதலில் வரப்பெற்ற மனுக்களின் அடிப்படையில் வரிசைக்கிரமமாக சேமநல நிதி கணக்கிலிருந்து காசோலை மூலம் வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (இதற்கென தனிபதிவேடு பேணப்பட்டு வருகிறது).<br>இரண்டாம் கட்டமாக சேமநல நிதி வட்டி ரூ.16458172/-ல் அரசிடமிருந்து வரப்பெற்ற ரூ.2540988/- கழித்து மீதி ரூ.13917184/-யை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கப்பட்ட ஊதியப் பிடித்த தொகை உடனுக்குடன் மாற்ற இயலாத காரணத்தாலும், அதே நேரத்தில் பணியாளர்கள் தனிநபருக்கு வட்டி குறைவாக வழங்க இயலாது என்பதாலும், தனிநபர்கள் நீதிமன்ற வழக்குகள் தொடர்ந்து அதனால் ஏற்படும் செலவுகளை கருத்தில் கொண்டும், தற்போதைய நிதிநிலைக்கேற்ப அவ்வப்போது பகுதி, பகுதி தொகையாக சேமநல நிதிக்கு மாற்றவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>1. நிதிநிலைக்கேற்ப அவ்வப்போது நகராட்சி வருவாய் நிதியிலிருந்து சேமநல நிதிக்கு மாற்றலாம்.<br>2. அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.881/2016/பி4) | |
| | **39** | 173. இந்நகராட்சி பணியாளர்களுக்கு 1993-1994 முதல் 2011-2012 வரை பணியாளர்களின் சேமநலநிதி பேரேட்டினை கொண்டு தனிநபர்களுக்கு வட்டி கணக்கீடு செய்யப்பட்டு 632 பணியாளர்களுக்கு கணக்கீடு செய்து கணக்கீட்டுத்தாள் கணிணியில் பதிவேற்றம் செய்ய வேண்டி உள்ளது. இந்நகராட்சியின் தட்டச்சர் பணியிடம் காலியாக உள்ளதால கணிணியில் பதிவேற்றம் செய்வதற்கு தற்காலிகமாக மூன்று நபர்களை வெளியிலிருந்து பணியமர்த்திடவும், மேற்படி பணிக்கான கூலி 1993-1994 முதல் 2011-2012 வரை 18 ஆண்டுகளுக்கு வழங்க வேண்டியுள்ளது. ஒரு வருடத்திற்கு ரூ.4000/- வீதம் 18 வருடங்களுக்கு ரூ.72000/- வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>அனுமதிக்கலாம்<br>(ந.க.எண்.881/2016/பி4) | **தீர்மானம் எண்.173**<br>அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது |
| | **40** | 174. 19.08.2019 அன்று சென்னையில் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற மழைநீர் சேகரிப்பு தொடர்பான ஆய்வுக் கூட்டத்தில் சம்பந்தப்பட்ட நகராட்சி எல்லைக்குள் உள்ள அனைத்து நகராட்சி கட்டிடங்களிலும் வருகின்ற பருவமழை காலத்திற்கு முன் ஏற்கனவே உள்ள மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை புதுப்பித்தல் அல்லது | **தீர்மானம் எண்.174**<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | | இல்லாத கட்டிடங்களில் புதிதாக மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் பணி உடனடியாக செய்து முடிக்கப்பட வேண்டும் என உத்தரவிட்டுள்ளார்கள். அதன்பேரில், இந்நகராட்சியில் உள்ள 14 நகராட்சி பள்ளி, நகராட்சி அலுவலக கட்டிடம், வளாகங்களில் உள்ள அனைத்து கட்டிடங்களில் ஏற்கனவே உள்ள மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை புதுப்பித்திடவும் மற்றும் இல்லாத இடங்களில் புதிதாக கட்டமைப்புகளை அமைத்திடவும் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.2.50 இலட்சத்திற்கு அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>பொதுநிதியின் கீழ் அனுமதிக்கலாம். | |
| | **41** | 175. இந்நகராட்சி சாத்தப்பா பூங்கா வளாகத்தில் உள்ள நீரளிப்பு நிலையத்தில் குடிநீர் விநியோகப் பணிக்கான தளவாடப் பொருட்கள் வைத்திடும் இருப்பு அறை மற்றும் அங்கு பணியில் உள்ள குடிநீர் பணியாளர் தங்குவதற்கு உள்ள ஆர்.சி.சி கட்டிடத்தின் மேற்கூரை முழுவதும் பழுதடைந்து கீழே விழும் நிலையில் உள்ளது. எனவே, மேற்படி கட்டிடத்தின் பழுதடைந்த ஆர்.சி.சி மேற்கூரையை முழுவதுமாக அகற்றிவிட்டு அலுமினியம் கலர் ஷீட் கொண்ட கூரை அமைத்திடவும் மற்றும் கட்டிடத்தில் உள்ள இதர பழுதுகளை மராமத்து செய்து புதுப்பித்தடவும் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.8.00 இலட்சத்திற்கு அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>குடிநீர் நிதியின் கீழ் அனுமதிக்கலாம். | **தீர்மானம் எண்.175**<br>அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது |

ஆணையர்
காரைக்குடி நகராட்சி